**உடுநுவர பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

உடுநுவரபிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லையென நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்ற வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமான என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவனங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 31 வெளித்தரப்பினரால் சபைக்கும் சபையினால் 08 வெளித் தரப்பினருக்கும் எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதும் அவை தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும் |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நிர்மாணங்களுக்கு செலவழிக்கப்பட்டிருந்த ரூபா 81,232,564 மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | கட்டிட நிர்மாணத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 7,070,462 தொகை மூலதனமாக்கப்பட்டுள்ளது எஞ்சிய நிர்மாணங் களுக்காக செலவிடப்பட்ட தொகை 2023 ஆம் ஆண்டின் போது சீராக்கம் செய்வதாக | கட்டிட நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய பங்களிப்பு தொகை நிதியத்தின் பற்றாக்குறையை தீர்வு செய்வதற்கு செலுத்திய ரூபா 594,918 ஆன தொகை மீளாய்வாண்டின் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் மூலம் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் உதவிகள் வழங்குவதற்காக ஆளுநர் அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த 67 திட்டங்களுக்காக ரூபா 5,129,500 தொகை மற்றும் கணினி மற்றும் அச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக கட்டளை ஒன்று பெற்றுக் கொள்ளாமல் ரூபா 600,000 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இச்செய்திட்டம் ஆளுநர் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லையாததால் அந்த முன்மொழிவை செயற்படுத்துவது இடை நிறுத்தப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டுகளில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட 33 செயற் திட்டங்களுக்குரிய ரூபா 1,593,364 கூட்டுத்தொகை தொடர்ந்தும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் மூலம் சீராக்கம் செய்வதாக | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | 1994 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான வைப்புக்கள் ரூபா 446,656 தொகையை வருமானத்திற்கு எடுக்கும் போது திரண்ட நிதியத்துக்கு செலவு வைக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | நி.பி 104(04) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வெளிக்களத்தில் வருமான சேகரிப்பின் போது இடம்பெற்ற மோசடிக்கு உரிய 04 தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 151,350 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தை சரியாக இனங்கண்டு சீராக்கம் செய்வதாக | பெற வேண்டிய கணக்குகளை இனம் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.3. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 சொத்து விடயங்கள் மற்றும் 03 பொறுப்பு விடயங்களுக்குரிய அட்டவணைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 31,147,304 ஆன இணக்கிமன்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | இம் மீதிகளைச் சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

### 1.6.4. தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 594,742 ஆன தொங்கல் கணக்கு மீதியை தேடி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 594,742 ஆன தொங்கல் கணக்கு மீதியை வருங் காலங்களில் சீராக்கம் செய்வதாக | குறைபாடுகளை இனங் கண்டு தொங்கல் கணக்கினை தீர்வு செய்ய வேண்டும். |

### 1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,315,416 தொகையான 03 கணக்கு மீதிகள் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | நிலையான சொத்துக்கள் தற்போது இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நீண்டகால வைப்புகளை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்கு தேவையான அட்டவணைகள் சரியாக தயாரிக்க பேணி செல்லப்பட வேண்டும் |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதவரி வருமான சேகரிப்பிற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மென்பொருள் முறைமையை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி வீதவரி செலுத்தும் நபர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு சபை வருமானத்திற்கு செலவு வைக்காமல் விடய பொறுப்பு உத்தியோகத்தரால் ரூபா 1,028,451 தொகையான நிதி முறைகேடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போது இறுதிப் பரிசோதனை | மோசடி செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளை தற்போது வரி செலுத்துபவர்களால் சமர்ப்பித்தலின் பேரில் இந்நிலுவை தொடர்பான திட்டவட்டமாக தீர்மானிப்பதில் தாமதம் இடம்பெற்றுள்ளதாக | நிலுவை மீதி சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

நடத்தப்பட்டு இருந்த போதும் இதுவரை மோசடி செய்யப்பட்டவர்களின் தனிப்பட்ட மீதிகள் சரி செய்யப்படாத இருந்தத்துடன் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் ரூபா 35,331,051 ஆன நிலுவை வீதவரி மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) **2018 இன் 19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 16 (2) ஆம் பிரிவின் | மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | 2023 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| 127 ஆம் பிரிவு | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 66 மயானங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக | சபை அதிகாரப் பிரதேசத்தில் மயானங்களின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 1988 பிரதேச சபை சட்டத்தின் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 115 | மணல், கொங்கிரீட் தூண்கள், முற்கம்பி மற்றும் நூலகப் புத்தகங்கள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும் போது பொருட்கள் கிடைக்கப பெற்றதாக மற்றும் பொருட் பதிவேடு, இருப்பு புத்தகங்களில் | தேவையான சான்றுகளை குறித்த உறுதிச்சீட்டுக்களில் இணைத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ளடக்கப்பட்டதாக உறுதிப்படுத்தாதிருக்கையில் 08 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 872,264 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,739,458 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,643,798 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 13,156,000 | 12,978,577 | 9,803,046 | 35,615,728 | 12,793,800 | 12,373,206 | 8,638,896 | 32,440,197 |
| (ii) | வாடகை | 3,770,000 | 32,184,265 | 13,747,785 | 18,729,330 | 2,585,000 | 552,100 | 452,130 | 292,850 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,450,000 | 2,989,008 | 2,702,508 | 994,300 | 3,000,500 | 1,566,709 | 1,566,708 | 707,800 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,114,750 | 52,309,537 | 88,717,013 | 37,053,107 | 64,765,500 | 64,631,971 | 72,588,256 | 73,460,583 |
| | கூட்டுத் தொகை | 41,490,750 | 100,461,387 | 114,970,352 | 92,392,465 | 83,144,800 | 79,123,986 | 83,245,990 | 106,901,430 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 593 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 10,317,312 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி நிலுவையை அறவிடுவதற்கு 2023 ஆம் ஆண்டில் அதிக கவனம் செலுத்தப்படுமென | நிலுவை வீதவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **ஏக்கர் வரி** | | |
| | 2015 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்படும் 196 ஆதனங்களிலிருந்து 202,996 தொகையான ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தொடர்ந்தும் ஏக்கர் வரி நிலுவை காணிகளில் இருந்து அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **முச்சக்கர வண்டி கட்டண அறவீடு** | | |
| | முன்னைய ஆண்டிற்குரிய 464 முச்சக்கர வண்டிகளில் இருந்து ரூபா 556,800 ஆன கட்டணங்கள் அறுவிடப்பட்டிருக்கவில்லை | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எழுத்து மூலம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் அந்த அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் இந்த அறவிடு தாமதமாக உள்ளதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஈ)** | **விளம்பர பதாகை பரிசோதனை** | | |
| | மீளாய்வாண்டின் போது 19 நிறுவனங்களால் நிறுவப்பட்டிருந்த 18 விளம்பர பதாகைகள் வருடாந்த மெய்மையாய்வின் போது இனங்காணப்படாமல் இருந்ததுடன், அதற்காக ரூபா 83,470 ஆன வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை | இந்த விளம்பர பதாகை களுக்காக பணத்தை அறவிடுவதற்கோ அல்லது அறவிடாமல் இருப்பதற்கு தொடர்பாக திட்டவட்டமான தகவலொன்றை சமர்ப்பிக்க முடியவில்லை என்பதாக | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

2.2.3 **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 30,189,796 ஆக இருந்தது. . | பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நிறவனங்களிடம் கோரி பணத்தைப் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக | நிலுவை முத்திரைக் கட்டணங்களைத பெற்றுக்கொள்ள வேண்டும். |

2.3 **மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,020,364 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | இந்த மிகை அறவீட்டிற்குரிய ஒரு உத்தியோகத்தர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளதாகவும் மற்றைய உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் | மிகை அறவீட்டினை செய்ய வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 22 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 17 விடயங்களுக்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரப் பிரதேசத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் உப விதிகள் பிறப்பிக்கப்படுகின்றன. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருந்துவத்த எஸ்டேட் என்ற பெயரிலான காணி விற்பனையால் ஏல விற்பனையாளரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 01 சதவீத வரி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் விற்பனை பெறுமதியின் எஞ்சிய தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | குருந்துவத்த எஸ்டேட் பெயரிலான காணி விற்பனையிலிருந்து 01 சதவீத வரி அக்காணி விற்பனை விலையில் பெற்றுக் கொள்வதற்காக குறித்த நிறுவனத்திற்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது | வரித் தொகை அறவிடப் வேண்டும் |
| (ஆ) | கெலிஓய பொது வியாபார தொகுதியின் 15 கடைகளை வாடகைக்கு வழங்கும் போது அறவிடப் வேண்டிய ரூபா 21,420,000 ஆன ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய தொகையில் மீளாய்வாண்டிற்குரிய அறவிடப் வேண்டிய ரூபா 749,780 தொகை மற்றும் மீதிக்குரிய ரூபா 1,891,881 ஆன வட்டி மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | சட்ட ரீதியாக அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு சபையின் சட்டத்தரணிருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கைத்தொழில் கடன்பட்டோர் நீதி ரூபா 13,476,975 ஆக இருந்ததுடன் அதில் ஒரு ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தை கடந்திருந்த மீதி ரூபா 6,299,373 ஆக இருந்தது. | வேண்டுகோள் கடிதங்கள் நினைவூட்டல் என்பன தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெறவேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய தொகையை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 03 கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,553,216 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 5 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,410,133 ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 909,356 ஆக இருந்தது. | பரீட்சிக்கப்பட்டு சீர் செய்யப்படும் | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய வேண்டும் |

## 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 5,503,000 ஆன 08 வாகனங்கள் 3 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விறைவற்று காணப்பட்டன. | 03 வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் 03 வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கும் 02 வாகனங்களை ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | குழாய் கிணறு களஞ்சியத்தில் ரூபா 424,463 கூட்டுத் தொகையான அசையாத இருப்பு மீதிகள் காணப்பட்டதுடன் அந்த இருப்புக்களைப் பயன்படுத்து வதற்கோ அல்லது வேறு பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உபகரணங்கள் நீர் வடிகாலமைப்பு சபைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருந்த போதும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு இந்த உபகரணங்கள் தேவைப்படவில்லை என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கைதவிர்ப்பதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **கையளிககப்படாத சொத்துக்கள்** | | |
| (அ) | சபைக்கு உரிய 67 காணிகள் மற்றும் குழாய் கிணறுகள் மற்றும் பொது கிணறுகள் அமைந்துள்ள 50 காணித் துண்டுகள் என்பவற்றின் உரித்து கையேறகப்பட்டிருக்கவில்லை. | மயான பூமி மற்றும் காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு கையேப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிருவாவுல மானெல் அங்க கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள 01 ஏக்கர் 01 ரூட் 26.69 பேர்ச் அளவிலான காணி ஒன்றுஉடன் கூடிய காணியின் உரித்துக் கையேற்கப்பட்டிருக்கவில்லை | இது சபைக்குரிய மானெல் அங்க கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள காணியின் உரித்தினைக் கையேற்க எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 9,456,954 ஆன மூலதனச் செலவினங்கள் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டி ருக்கவில்லை |

**3.6 ஒப்பந்த நிர்மாணத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **மீவலதெனிய உலக்கெந்த சனசமூக நிலைய நிர்மாணம் ரூபா 1,431,895** | | |
| i | பட்டியலின் பிரகாரம் வேலை விடயம் 01 இன் கீழ் சுவர் கட்டுதல் (Masonry Block Works) கட்டுவதற்காக 150 மி.மீ தடிப்பிலான சீமேந்து கற்கள் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அந் நிர்மாணத்திற்காக 100 மி.மீ அளவிலான சீமெந்து கற்கள் இடப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 95,634 விதந்துரைகளுக்கு புறம்பாக நிர்மானிப்பதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 95,634 தொகையை பிடிகாசிலிருந்து அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். பிடிகாசு இதுவரை விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட நியமத்தின் பிரகாரம் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| ii | பட்டியலின் பிரகாரம் வேலை விடை இலக்கம் 03 மற்றும் 04 கீழ் அலுமினியம் கதவு மற்றும் யன்னல்களுக்காக ரூபா 460,194 தொகை செலுத்தப்பட்டு இருந்த போதும் கட்டிடங்கள் விகித பகுப்பாய்வின் K 001 மற்றும் K 010 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட அலுமினியம் 10 - 15 மைக்ரோ கினெடின் போட்களில் விதந்துரைகளில் குறிப்பிடப்பட்ட வகையில் அந்நிர்மாணம் மேற்கொள்ளப் படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 466,194 ஆன விதந்துரைகளுக்கு புறம்பாக நிர்மாணத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விதந்துரைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சரியாக செய்யப்பட வேண்டுமென சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பட்டியலைப் பரிந்துரைந்த உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ)** | **மாணிக்காவ கோணவத்த வீதி நிர்மாணம் - ரூபா 1,199,826** | | |
| i | வேலை விடய இலக்கம் 01 இன் மூலம் வீதிக்கு ABC இடுவதற்கு ஒரு கனமீற்றருக்கு ரூபா 6,070 வீதம் 23.07 கனமீற்றருக்காக ரூபா 144,890 மற்றும் ABC போக்குவரத்துக்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 1,736 வீதம் மற்றும் 23.92 மீற்றருக்கு ரூபா 41,525 செலவிடப்பட்டிருந்தது. வீதியின் 0.150 கனமீற்றருக்கு ABC இடப்பட வேண்டிய போதிலும் வீதியின் 03 இடங்களை பரீட்சித்த போது 0.050 மீற்றர் தடுப்பிற்கு ABC பரப்பியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | 23.07 மீற்றர் ABC இற்காக ரூபா 144,890 தொகை செலவிடப்பட்டிருந்தது. ரூபா 119,983 ஆன பிடிகாசு மற்றும் ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா 24,907 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறைவேற்றப்படாத வேலைக்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii | 0.150 மீட்டர் தடிப்பில் ABC இடப்பட்ட இவ்வீதியின் ஏபிசி தட்டின் தடிப்பினை பரீட்சித்தபோது தடுப்பினை பரீட்சித்தபோது பரீட்சிப்பு பரிசோதனை (Field Density Test) மேற்கொள்ளப்படாமையால் இந்த வீதிக்கு இடப்பட்ட ABC அளவினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது வரும் காலங்களில் குறித்த ஒவ்வொரு நிர்மாணத்திற்காகவும் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | ABC தட்டின் தடிப்பினை பரீட்சிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பட்டியலைப் பரிந்துரைந்த உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(இ) தம்பளந்த துணுகஹமுள்ள இருந்து வதுபொல வரையான வீதி அபிவிருத்தி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதியத்தின் மூலம் தம்பளந்த துணுகஹமுள்ள இருந்து வதுபொல வரையான வீதி அபிவிருத்திக்காக வட்டப்பல கிராம அபிவிருத்தி சங்கத்துடன் ரூபா 198,347 இற்கு உடன்படிக்கை செய்து நிர்மாணம் கையளிக்கப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக கோவையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பௌதீக பரிசோதனை போது அவ்வீதி அபிவிருத்தி செய்யப்படாமல் அங்கீகாரமொன்று இல்லாமல் தனியார் வீதி ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது | இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டும் |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 13 பதவிகளில் 26 வெற்றிடங்களும் அதன் பதவியொன்றில் 14 மிகைகள் காணப்பட்டன. | 14 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் இச்சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன் சபையின் அனைத்து வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | ஓய்வு பெற்ற மரணித்த மற்றும் சேவை விட்டுச் சென்ற 17 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,204,482 ஆன கடன் மீதியொன்று 04 ஆண்டுகள் காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் களின் தற்போதைய சேவை நிலையம் தேடி ஆராயப்பட்டு கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்படாதிருந்துதுடன் நிலையான அபிவிருத்தி திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நிலையான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |